1973 நவம்பர் 24]

இருப்பதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்ய முன்வருமா? இல்லா விட்டால் ஒரு பேஷண்ட் இருக்கிற வரையிலும் இன்னொரு பேஷண்ட் அங்கே அட்மிட் பண்ண முடியாது என்ற நிலைமை இருக்கிறது. அதற்குப் பரிகாரம் காண அரசு செயல்படுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இது தொடர்பு உள்ள கேள்வி தான் என்று சொன்னாலும் தனியான பிரச்னை. இதையெல்லாம் அங்கத்தினர் அவர்கள் எழுதி அனுப்பினால் பரிசீலித்து தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும். ஏனென்றால் அதைப்பற்றிய விவரங்கள் என்னிடம் இல்லை.

ஆரோவில் நகரமைப்புக்கு உதவி

***365 வின—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

புதுவை மாநிலம் பாண்டிச்சேரி அருகே ஆரோவில் நகரம் அமையப்பெற நமது அரசினரிடம் உதவி ஏதேனும் கோரப் பட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : உதவி கேட்கப்படவில்லை.

திருச்சிராப்பள்ளி-கரூர் நெடுஞ்சாலை

***366 வின—திரு. வா. மை. அப்துல் ஜப்பார் :** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம்-கூடலூர் நெடுஞ்சாலையில் திருச்சிராப் பள்ளிக்கும் கரூருக்கும் இடையிலுள்ள பாதையை விரிவுபடுத்தி நேர்படுத்தும் (straightening) திட்டம் ஏதும் அரசிடம் உண்டா?

(இ) ஆம் எனில், எப்பொழுது இது குறித்து பணி துவங்கும்?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) ஆம்.

(இ) நிதி நிலைமை, வேலையின் முக்கியத்துவம் ஆகியவற்றை பொறுத்து பகுதி பார்ப்பதற்காக ஒதுக்கப்படும் தொகையின் கீழ் இவ்வேலை எடுத்துக் கொள்ளப்படும்.